William H. Monk, 1871

Coronae
87.87.47



பாமாலை 16 E - ஆ கர்த்தாவே தாழ்மையாக

1. ஆ கர்த்தாவே, தாழ்மையாக
திருப் பாதத்தண்டையே
தெண்டனிட ஆவலாக
வந்தேன், நல்ல இயேசுவே
உம்மைத் தேடி
தரிசிக்கவே வந்தேன்.

2. வல்ல கர்த்தாவினுடைய
தூய ஆட்டுக்குட்டியே
நீரே என்றும் என்னுடைய
ஞான மணவாளனே;
உம்மைத் தேடி
தரிசிக்கவே வந்தேன்.

3. என் பிரார்த்தனையைக் கேளும்,
அத்தியந்த பணிவாய்;
கெஞ்சும் என்னை ஏற்றுக் கொள்ளும்
உம்முடைய பிள்ளையாய்
உம்மைத் தேடி
தரிசிக்கவே வந்தேன்.